விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 103 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 18 செவ்வாய்க்கிழமை (01.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## புலி ஆதரவாளர்களால் நாட்டுக்கு அச்சுறுத்தல்

பதறுகிறார் தயாசிறி



3 ஆம் பக்கம் பார்க்க

## போலி ஆவணங்களூடாக தையிட்டி விகாரையைக் கைப்பற்றச் சதி

விமல் வீரவன்ஸ கண்டுபிடிப்பு



5 ஆம் பக்கம் பார்க்க

## லாஃப் காஸ் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

லாஃப் காஸ் நிறுவனம் தனது சமையல் எரிவாயுவின் விலையை நேற்று நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளது.

15



### மாகாண சபை, 13ஆவது திருத்தம்

## பாரதப் பிரதமர் மோடியுடன் கதைப்பதற்கு ஒன்றுமில்லை

இங்ஙனம் இயம்புகிறார் பிமல்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அநுரவுக்கும் பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான கலந்து

15

## நாயாறு கடலில் மூழ்கி இரண்டு யுவதிகள் பலி

முல்லைத்தீவில் சோகம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நாயாறு கடலில் மூழ்கி இரண்டு யுவதிகள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற குறித்த சோகச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உடையார்கட்டுப் பகுதியில் தையல்

04

# இந்திய - இலங்கை இராணுவ ஒப்பந்தம்

# 3ஆம் உலகப் போருக்கு வழிவகுக்கும்

## மக்கள் போராட்ட முன்னணி டமார்... டமார்...

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின்போது, கைச்சாத்திடப்படவுள்ள இந்திய - இலங்கை இராணுவ ஒப்பந்தம் இலங்கையை உலகப்போரில் தள்ளும் என மக்கள் போராட்ட முன்னணியின் நிர்வாக உறுப்பினர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## சிறையில் அடைப்பதா ஜனாதிபதியின் அதிகாரம்

அநுரவிடம் கேட்கிறார் சாகர

(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்பு பலர் கைது செய்யப்படுவார்கள் என்று ஜனாதிபதி அநுர நேற்று முன்தினம் பகிரங்கமாகத் தெரிவித்திருந்த நிலையில் அவரது கூற்று அபத்தமானது. அவர் மக்களை ஒவ்வொருவராக சிறையில் அடைக்க முயற்சிக்கிறாரா? என்று

02

## அரச சேவையில் இணைய 30 ஆயிரம் இளையோருக்கு வாய்ப்பு

### மேலும் 4 இலட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும

புத்தளத்தில் ஜனாதிபதி அநுர அறிவிப்பு



(புத்தளம்)

அரச சேவையில் 30,000 இளைஞ் யுவதிகளை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத்

15

## பெற்றோலின் விலை ரூ.10 ஆல் குறைந்தது

(கொழும்பு)

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருட்களின் சில்லறை விற்பனை விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாயினால்

15

## டிரான் அலஸிடம் 6 மணி நேர விசாரணை

(கொழும்பு)

முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையான நிலையில், அவரிடம் சுமார் 6 மணிநேரம் கிடுக்குப்பிடி விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு மாத்தறை - வெலிகம

02

## நாளுக்கு நாள் அதிகரிக்கிறது வெப்பம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் வெப்பம் காரணமாக ஏற்படக்கூடிய சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து அவதானம் செலுத்துமாறும் சரியான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்றும் வடக்கு உட்பட மேல் வட

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி மின் விளக்குகளுக்கு கட்டணம் அறவிட்டால் மின் கம்பங்களுக்கு கட்டணம் அறவிடுவோம்

## வடக்கு மாகாண பிரதம செயலர் இளங்கோவன்



(யாழ்ப்பாணம்)

வீதி மின்விளக்குகள் பொருத்துவதற்கு எதிர்காலத்தில் இலங்கை மின்சார சபை கட்டணம் அறவிட்டால், மின்கம்பங்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் கட்டணம் அறவிட வேண்டியிருக்கும் என வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கும் இடையிலான மார்ச் மாதத்துக்கான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

அதன் போது வீதி மின் விளக்குகள் பொருத்துவதில் உள்ள சவால்கள் தொடர்பில் ஆளுநர் கேட்டறிந்து கொண்டார். இது தொடர்பில் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தி அதன் ஊடாக அமைச்சரவைப் பத்திரம் சமர்பிப்பதற்கு ஏதுவாக யோசனைகளை வடக்கு மாகாணத்தின் சார்பில் வழங்குவதற்கு ஆளுநர் கோரினார்.

அதன் போது இலங்கை மின்சாரசபை வீதி மின் விளக்குகள் பொருத்துவதற்கு இடத்துக்கு இடம் அதிகளவான கட்டணத்தை அறவிடுவதாகவும் தற்போது வீதி மின்விளக்குகளின் பாவனைக்கு மின்சாரக் கட்டணத்தையும் கோர முற்படுவதாக உள்ளூராட்சிமன்றங்களின் செயலாளர்கள் தெரிவித்தனர்.

எனவே கடந்த காலங்களைப்போன்று இலவசமாக மின்விளக்குகள் பொருத்துவதற்கு மின்சாரசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் குறிப்பிட்டனர்.

அவ்வேளை உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான வீதிகளில் இலங்கை மின்சார சபை எந்தவொரு கட்டணமும் இன்றியே மின்கம்பங்களை நடுகை செய்துள்ளதை வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன் சுட்டிக் காட்டினார்.

எனவே வீதி மின்விளக்குகள் பொருத்துவதற்கு எதிர் காலத்தில் இலங்கை மின்சார சபை கட்டணம் அறவிட்டால், மின்கம்பங்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் கட்டணம் அறவிடவேண்டியிருக்கும் எனக் குறிப்பிட்டார். அத்துடன் இலங்கை மின்சார சபையின் ஒப்பந்தகாரர்கள், மின் விநியோகத்திற்கு இடையூறு எனத் தெரிவித்து வீதிகளில் இருக்கும் மரங்களை ஒழுங்கு முறையில்லாமல் வெட்டுவதாகவும் வெட்டும் மரங்களின் குப்பைகளை வீதியில் அப்படியே போட்டுவிட்டுச் செல்வதால் விபத்துக்கள் ஏற்படுவதாகவும் இது தொடர்பில் இலங்கை மின்சார சபைக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாக உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் சிலர் குறிப்பிட்டனர். அதை மேற்கொள்ளுமாறு ஆளுநர் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கு அறிவுறுத்தினார். (ந-7,4)

## சிறையில்...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் கேள்வியெழுப்பினார்.

நேற்று திங்கட்கிழமை இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதி இதுபோன்ற அறிக்கையை வெளியிடுவது ஒருபோதும் பொருத்தமானதல்ல.

சட்டத்தின்படியே ஒருவரைக் கைதுசெய்ய வேண்டும் இது தொடர்பாக அரசியல் மேடையில் ஜனாதிபதியின் அறிக்கை மூன்றாம் தரச் செயலாகவுள்ளது.

தற்போதைய அரசாங்கம் மக்களை ஏமாற்றிவிட்டதை மக்கள் தற்போது உணர்ந்துள்ளதால், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீண்டும் பொய் சொல்லி மக்களை ஏமாற்றத் தயாராகி வருகிறார். தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வர பிரிவினைவாதிகள் உதவினார்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் அரசாங்கம் பிரிவினைவாதிகள் விரும்பும் விதத்தில் செயல்படுகிறது.

சட்டத்தின் ஆட்சி நிலவும் ஒரு நாட்டில், செயல்பாட்டுச் சுதந்திரத்தில் யாரும் தலையிட முடியாது என்றும், சட்டத்தின் ஆட்சி ஒழிக்கப்பட்டால், அந்த நாட்டு மக்கள் தங்கள் ஜனநாயக உரிமைகளை இழப்பார்கள் என்றும் அவர் கூறியுள்ளார். (ந-7,4)

## மயிலிட்டியில் மக்கள் வங்கி இன்று திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

இதுவரை காலமும் காங்கேசன்துறையில் இயங்கி வந்த மக்கள் வங்கி பலாலி சேவை நிலையம் இன்று ஏப் ரல் முதலாம் திகதி தொடக்கம் மயிலிட்டியில் (மயிலிட்டிச் சந்தி) இயங்கவுள்ளது. (ந-7,4)

## டிரான்...

பிரதேசத்தில் அமைந்து ள்ள ஹோட்டலொன்றுக்கருகில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு தொடர்பில் வாக்குமூலமளிப்பதற்காக முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று(31) ஆஜராகியிருந்தார்.

இதன்போது டிரான் அலஸிடமிருந்து 6 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் வாக்குமூலம் வழங்கிய பின்னர் டிரான் அலஸ் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இருந்து வெளியேறியுள்ளார். (ந-7,4)

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!
உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :
தொலைபேசி:
076 097 3127
021 221 7603
/ - 076 636 3378
E.mail: Valampurii@yahoo.com

பல ஆயிரம் கடந்த பதிவுகள்...



பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்
உங்கள்
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்



தொடர்பு - கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத சொத்துக்கள்

# அரசுடைமையாக்கும் சட்டமூலம்

# ஏப்ரல் 8 இல் சமர்ப்பிக்கப்படும்

## ஜனாதிபதி அதிரடி



(கொழும்பு)

**சட்டவிரோதமாக ஈட்டிய சொத்துக்களை அரசுடைமையாக்கும் சட்டமூலம் ஏப்ரல் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

மாத்தறை வெலிப்பிட்டிய பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது ஜனாதிபதி இதைக் குறிப்பிட்டார்.

மேலும் மோசடி செய்பவர்கள் மற்றும் ஊழல்வாதிகளுக்கு மீண்டும் நாட்டை ஆட்சி செய்ய வாய்ப்பு வழங்கப்படாது என்றும் சுட்டிக்காட்டினார்.

திருடப்பட்டு குவிக்கப்பட்ட சொத்துக்களை அரசுடைமையாக்கும் சட்டத்தை வரும் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவோம்.

யாரையும் தனிப்பட்ட முறையில் பழிவாங்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை.

"எங்கள் தாய்நாட்டில் சட்டத்தின் ஆட்சியையும் இறையாண்மையையும் மீண்டும் நிலைநாட்டுவதே எங்கள் எதிர்பார்ப்பு" எனத் தெரிவித்தார். (நி)

# புலி ஆதரவாளர்களால் நாட்டுக்கு அச்சுறுத்தல்

## பதறுகிறார் தயாசிறி



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்களான புலம் பெயர் தமிழர்களின் அழுத்தங்களால் நாட்டுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

குருணாகலில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இதற்கு முன்னர் 58 பேருக்கு எதிராக இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இதனை வழக்கமாகக் கொண்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் பிரித்தானியா தடை விதிப்பது இதுவே முதன்முறையாகும்.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து 16 ஆண்டுகளின் பின்னர் இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. பட்டலந்த ஆணைக் குழுவில் ஆரம்பித்தது இன்று இந்த நிலைமையில் வந்து நிற்கின்றது.

பட்டலந்த வதை முகாம் தொடர்பில் ஆணைக்குழு அமைத்து விசாரணைகளை முன்னெடுப்பதாயின் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புலம் பெயர் தமிழர்கள் உள்ளிட்ட தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

எனவே வெளிநாடுகளின் இவ்வாறான செயற்பாடுகள் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியவையாகும். ஆனால் வெளிவிவகார அமைச்சு இந்த விவகாரத்தில் அமைதியாகவுள்ளது.

இதே நிலைமை தொடர்ந்தால் இது நாட்டுக்கே அச்சுறுத்தலாக அமையும். எனவே இவ்வாறான விடயங்களில் நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் தீர்மானங்களை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

யுத்தத்தின் போது பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமாகும். ஆனால் அது குறித்த விசாரணைகள் உள்ளக பொறிமுறையின் கீழ் முன்னெடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (நி)

# பால் சார்ந்த உணவுகளின் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

பால் மாவின் விலை அதிகரிப்பால் பால் தேநீர் உட்பட பால் சார்ந்த உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கப் பட்டுள்ளது.

பால் தேநீர், பழச்சாறுகள், சீஸ் ஆகியவற்றின் விலைகள் 10 ரூபாவால் அதிகரிக் கப்படும் என்று அகில இலங்கை சிற்றுண்டிசாலைகள் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷனா ருக்ஷன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது.

பால் மாவின் விலை உயர்வைக் கருத்தில் கொண்டு, பால் தேநீர் தவிர, பாலைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் அனைத்து வகையான பழச்சாறுகளின் ஒரு கோப்பையின் விலை நேற்று நள்ளிரவு முதல் 10 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, பாலைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் சீஸ், உள்ளிட்ட பல வகையான உணவுப் பொருட்களின் விலையும் ரூ.10 உயர்த்தப்படும் என்று சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# குளுகோமா நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வு

## கண் சத்திர சிகிச்சை வைத்தியர்கள் சங்கம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தற்போது குளுகோமா எனப்படும் கண் அழுத்த நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 3.8 சதவீதம் உயர்வடைந்துள்ளதாக கண் சத்திரசிகிச்சை வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆரம்பத்திலேயே இந்த குளுகோமா நோயைக் கட்டுப்படுத்த வேண்டும்.

உரிய சிகிச்சையை பெறாவிடின் இறுதியில் பார்வையை இழக்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

40 வயதைக் கடந்தவர்களே இந்த நோயினால் அதிகம் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒருவருக்கு நோய் அறிகுறிகள் தென்பட்டால் அவர் உடனே கண் சிகிச்சை வைத்தியரை நாடி சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும் என கண் சத்திர சிகிச்சை வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

# பிரதமர் ஹரிணி தாய்லாந்து விஜயம்

(கொழும்பு)

பிரதமர் ஹரிணி அமரசூரிய பதவியேற்ற பிறகு தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை தாய்லாந்துக்கு மேற்கொள்ளவுள்ளார்.

ஆறாவது பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளியுறவு வெளிநாட்டு வேலைவாய்ப்பு துணை அமைச்சர் அருண் ஹேமசந்திர ஆகியோர் இந்த வார இறுதியில் தாய்லாந்து செல்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வங்காள விரிகுடாவின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான முன்முயற்சி உறுப்பு நாடுகளின் தலைவர்கள்



வர்த்தகம், தொடர்பு, பாதுகாப்பு மற்றும் காலநிலை மீள்தன்மை ஆகியவற்றில் பிராந்திய ஒத்துழைப்புக் குறித்து கலந்துரையாட, சந்திக்க உள்ளனர்.


இதேவேளை, இந்த உச்சி மாநாடு ஏப்ரல் 3 மற்றும் 4 ஆகிய திகதிகளில் பாங்கொக்கில் "வளமான, நெகிழ்ச்சியான மற்றும் வெளிப்படையான" என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறவுள்ளது.

இதற்கமைய பிரதமர் ஹரிணி அமரசூரிய பதவியேற்ற பிறகு மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டெழுந்தது மும்பை

## அறிமுகப் போட்டியில் முத்திரை பதித்தார் அஸ்வனி குமார்
## இலகுவில் சரணடைந்தது கொல்கத்தா



அறிமுக வீரர் அஸ்வனி குமாரின் அசத்தலான பந்துவீச்சும் ரியான் ரிக்கல்ட்டின் அதிரடியும் இணைசேர கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் மும்பை அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் முதல் வெற்றியை பதிவு செய்தது.

18ஆவது பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரின் 12ஆவது லீக் போட்டி, மஹாராஷ்டிரா மாநிலம் மும்பையில் நடந்தது. இதில் கொல்கத்தா - மும்பை அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணி, பந்துவீச்சை தேர்வு செய்தது. மும்பை அணியில் அஸ்வனி குமாருக்கு புதிதாக வாய்ப்பு அளிக்கப்பட்டது. விக்னேஷ் புத்தூரும் வாய்ப்பு பெற்றார்.

கொல்கத்தா அணியில், மொயின் அலிக்கு பதில் சுனில் நரைனுக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

**திணறிய கொல்கத்தா வீரர்கள்**

இந்நிலையில் முதலில் களமிறங்கிய கொல்கத்தா அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்களான குயின்ரன் டி கொக் ஒரு ஓட்டத்தில் சஹார் பந்தில் ஆட்டமிழந்தார். சுனில் நரைன் ஓட்டங்கள் எடுக்காமல் போல்ட் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித் தலைவர் ரகானே சோபிக்கவில்லை 11 ஓட்டங்களில் அஸ்வனி குமார் பந்தில் வெளியேறினார். ரகுவன்ஷி சிறிது நேரம் தாக்குப் பிடித்து விளையாடி 26 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் பாண்ட்யா பந்தில் அவுட் ஆனார். அடுத்து வந்த வெங்கடேஷ், 3 ரன்னில் சஹார் பந்தில் அவுட் ஆனார். ரிங்கு சிங், அஸ்வனி குமார் பந்தில் 17 ஓட்டங்களுடன் வெளியேறினார். மணிஷ் பாண்டே 19 ஓட்டங்களில் அஸ்வனி குமார் பந்தில் போல்டானார். அடுத்து வந்த ரஸ்ஸல் 5 ரன் எடுத்தபோது அஸ்வனி குமார் பந்தில் போல்டானார். ஹர்ஷித் ரானா, 4 ரன்னில் விக்னேஷ் புத்தூர் பந்தில் ஆட்டமிழந்தார்.

ரமன் தீப் சிங் 22 ஓட்டங்களில் சாண்ட்னர் பந்தில் அவுட் ஆக, கொல்கத்தா அணி, 16.2 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 116 ஓட்டங்களுக்கு சுருண்டது.

பந்துவீச்சில் அறிமுக வீரராக வந்த அஸ்வனி குமார் 4 விக்கெட்டுகள் எடுத்தார்.

117 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு அடுத்து களமிறங்கிய மும்பை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ரோகித் சர்மா 13 ஓட்டங்களில் ரஸல் பந்தில் ஆட்டமிழந்தார்.

**ரியான் ரிக்கல்டன் அதிரடி ஆட்டம்:**

அதிரடியாக விளையாடிய ரியான் ரிக்கல்டன் அரைச்சதம் கடந்து ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்கள் சேர்த்தார். அவருடன் இணைந்து விளையாடிய சூர்யகுமார் யாதவ் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்கள் எடுத்து அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

இறுதியில் மும்பை அணி, 12.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 121 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் இத் தொடரின் முதல் வெற்றியை பதிவு செய்தது. (ந-7,4)

## கண்காட்சி கால்பந்து போட்டி
# இந்தியாவை வீழ்த்தியது பிரேசில்



கண்காட்சி கால்பந்து போட்டியில் இந்திய அணி 1-2 என பிரேசில் அணியிடம் தோல்வியடைந்தது.

சென்னையில், கண்காட்சி கால்பந்து போட்டி நடந்தது. இதில் ரொனால்டினோ தலைமையிலான பிரேசில் லெஜண்ட்ஸ் அணி, விஜயன் வழிநடத்திய "இந்தியா ஆல் ஸ்ரார்ஸ்" அணிகள் மோதின.

பிரேசில் சார்பில் கடந்த 2002ல் "பிபா" உலகக்கிண்ணம் வென்ற பிரேசில் அணியில் இடம்பெற்றிருந்த ரொனால்டினோ, ரிவால்டோ, கில்பர்டோ சில்வா உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்திய அணியில் முன்னாள் வீரர்களான விஜயன், சண்முகம் வெங்கடேஷ், கரண்ஜித் சிங், சுபாஷிஷ் ராய் சவுத்ரி, அர்னாப்மாண்டல், நல்லப்பன் மோகன்ராஜ் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர்.

மொத்தம் 70 நிமிடம் போட்டி நடந்தது. முதல் பாதி கோல் எதுவுமின்றி சமநிலையில் இருந்தது. இரண்டாவது பாதியின் 43வது நிமிடத்தில் பிரேசிலின் வயோலா ஒரு கோல் அடித்தார். இதற்கு அடுத்த நிமிடத்தில் இந்தியாவின் பிபியானோ பெர்னான்டஸ் ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார். பின் 64வது நிமிடத்தில் பிரேசிலின் ரிக்கார்டோ ஒலிவேரா ஒரு கோல் அடித்து 2-1 என முன்னிலை பெற்றுத் தந்தார். தொடர்ந்து போராடிய இந்திய வீரர்களால் கூடுதலாகக் கோல் அடிக்க முடியவில்லை.

ஆட்டநேர முடிவில் பிரேசில் அணி 2-1 என்ற கணக்கில் இந்தியாவை வீழ்த்தியது. (ந-7,4)

## ஐ.பி.எல் செய்தித் துளிகள்...
# இரு அணிகளின்
## கப்டன்களுக்கு அபராதம்

ஐ.பி.எல் போட்டிகளில் தாமதமாக பந்து வீசியதால் மும்பை அணி கப்டன் ஹர்திக் மற்றும் ராஜஸ்தான் கப்டன் ரியான் ஆகிய இருவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது.

அஹமதாபாத்தில் நடந்த பிரீமியர் லீக் போட்டியில் மும்பை அணி 36 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியிடம் தோல்வியடைந்தது.

குஜராத் அணிக்கு எதிரான போட்டியில் மும்பை அணியினர் குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்து வீசத் தவறினர்.

இதனையடுத்து மும்பை அணி கப்டன் ஹர்திக் பாண்ட்யாவுக்கு போட்டிச் சம்பளத்தில் இருந்து ரூ.12 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த சீசனில் மும்பை அணி 3 போட்டியில் தாமதமாகப் பந்து வீசியதால், இம்முறை சென்னைக்கு எதிரான போட்டியில் பங்கேற்க ஹர்திக் இற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

ஐ.பி.எல் 2025 சீசனின் 11 ஆவது லீக் போட்டி கவுகாத்தியில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 182 ரன்கள் எடுத்தது. நிதிஷ் ராணா அதிரடியாக ஆடி 81 ரன்கள் குவித்தார்.

தொடர்ந்து ஆடிய சி.எஸ்.கே 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 176 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 6 ரன்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியில் தாமதமாகப் பந்து வீசியதற்காக கப்டன் ரியான் பராக் கிற்கு ரூ.12 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஐ.பி.எல் நடத்தை விதிகளின் பிரிவு 2.2 இன் கீழ் இந்த அபராதம் விதிக்கப்படுகிறது.

ராஜஸ்தான் அணியின் அடுத்த போட்டியில் இருந்து சஞ்சு சாம்சன் கப்டனாக வழி நடத்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாயாறு ...

கற்கும் யுவதிகளும் தையல் பயிற்றுவிப்பாளர்களுமாக 15 பெண்கள் நாயாறு கடற்பரப்பில் நீராடியவேளை, மூவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதன்போது துரிதமாகச் செயற்பட்ட அப்பகுதி மீனவர்கள் நீரில் மூழ்கியவர்களில் இருவரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதனைத் தொடர்ந்து நீரில் அடித்துச் செல்லப்பட்ட மற்றைய யுவதியை தேடும் பணிகள் நீண்டநேரமாகத் தொடர்ந்த நிலையில் குறித்த யுவதி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உடையார்கட்டு இருட்டுமடு கிராமத்தைச் சேர்ந்த சிவகுமார் விதுஷிகா (வயது-20) என்ற யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ இடத்துக்கு வருகைதந்த முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்தார்.

இதனையடுத்து உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இரண்டு யுவதிகளில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் வள்ளிபுனம் பகுதியைச் சேர்ந்த சிவபாலராஜா பிரியந்தினி (வயது-20) என்ற யுவதியே உயிரிழந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை கொக்குளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-7,299)

# இன்றைய ஆட்டங்கள்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போலி ஆவணங்கள் மூலம் காணியை அபகரிக்கவே போராட்டம்

## திஸ்ஸ விகாரை தொடர்பில் விமலின் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

**இந்து தொல்பொருள் சின்னங்களுக்கு எவரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. பௌத்த சின்னங்களே திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகின்றன என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.**

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு சொந்தமான காணியை அப்பிரதேசவாதிகள் போலியான காணி உறுதிப்பத்திரங்களுடன் கையகப்படுத்தியுள்ளனர்.

மிகுதியாகியுள்ள காணிகளை சட்டவிரோதமான முறையில் கையகப்படுத்திக் கொள்வதற்கு தொடரும் போராட்டங்களால் விகாரையின் பூஜை வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிக்கிறார்கள்.

தையிட்டி விகாரையில் கடந்த வாரம் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்ற போது ஒரு தரப்பினர் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்புக்காக அமர்த்தப்பட்டிருந்த இராணுவத்தினர் அவ்விடத்தில் இருந்து வெளியேறியுள்ளார்கள். இதற்கான கட்டளையை இராணுவத் தளபதி பிறப்பித்துள்ளார்.

இந்த முறையற்ற செயற்பாட்டிற்கு அதிருப்தி வெளிப்படுத்தி மல்வத்து பீடம் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

பிற மதத்தைச் சார்ந்த இராணுவத் தளபதி இவ்விடயத்தில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

புத்தசாசனம் மற்றும் கலை கலாசார அமைச்சில் பிரதான உயர் பதவிகளை வகிக்கும் இருவர் பௌத்த மதத்தை சார்ந்தவர்கள் அல்ல, முஸ்லிம் மத விவகார திணைக்களத்துக்கோ, இந்து மத விவகார திணைக்களத்துக்கோ அந்த மதத்தை சாராத பிற மதத்தை சார்ந்தவர்களை உயர் பதவிக்கு நியமித்தால் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் இடங்களை பௌத்தம் மற்றும் இந்து என்று மத அடிப்படையில் அடையாளப்படுத்த வேண்டாம் என்று தொல்பொருள் திணைக்களத்துக்கு அரசாங்கம் அறிவித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்து மத தொல்பொருள் சின்னங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. பௌத்த மத தொல்பொருள் சின்னங்கள் தான் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகின்றன.

பௌத்த மதத்தை பாதுகாக்க வேண்டியது அத்தியாவசியம் என்று அரசியலமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே ஆட்சியாளர்கள் அதற்கமைய செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (நி)

# மரண அறிவித்தல்



## நாகரத்தினஐயர் ஏகாம்பிகை அம்மா

புளியங்கூடல் ஊற்காவற்றுறையை பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட இணுவில் கந்தசுவாமி கோவில் பரம்பரைக் குரு அமரர்.நாகரத்தின ஐயரின் மனைவியான ஏகாம்பிகை, துன்னாலை கோவிற்கடவையில் 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரக்குருக்கள், குப்புலட்சுமி அவர்களின் அன்பு மகளும், இணுவில் நாகரத்தின ஐயரின் அன்பு மனைவியும் கரீந்திரக்குருக்கள் (கனடா), குகேந்திரக்குருக்கள் (லண்டன்), கார்திகேய ஐயர் (கனடா), கலாதரக்குருக்கள் (ஆசிரியர்-யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், குருக்கள்-கோவிற்கடவை பிள்ளையார் ஆலயம், கோவிற்கடவை ஐயப்பன் ஆலயம்) ஆகியோரின் தாயாரும், ருக்மணி அம்மா (டென்மார்க்), அமரர்.சத்யபாமா, பாலச்சந்திரன் (சபேஸ்), சகுந்தலா ஆகியோரின் சகோதரியும், மேனகா (கனடா), பத்மஶ்ரீ (சீதா), மாலா (கொழும்பு), மைதிலி ஆகியோரின் மாமியாரும், சாருஹாசன், கீர்த்திகா, தாரிகா, வாரணன், வாண்மிகா, ஸபரிசசர்மா, காலஞ்சென்ற சாரங்கன் ஆகியோரின் பேர்த்தியாரும், ஔஷத், ஹார்ணி, மகண்யா, சாத்விக், கிருத்விக் ஆகியோரின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.04.2025 நாளை புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் கோவிற்கடவையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக வேரகொண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவிற்கடவை,
துன்னாலை மத்தி, கரவெட்டி
(கோவில் முன்புறம்)

(c-2586)

தகவல் : குடும்பத்தினர்
கலாதரக்குருக்கள் (மகன்)
077 969 0990

# இராசிபலன்

01.04.2025
பங்குனி 18, திங்கட்கிழமை
பரணி பிற்பகல் 3.28 மணிவரை

திருதியை முற்பகல் 10.10 மணிவரை
சுபநேரம் 10.41-12.11 மணிவரை
இராகுகாலம் 3.11-4.41 மணிவரை

கார்த்திகை விரதம்,
சதுர்த்தி விரதம்

வளவன்




தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.




பயணங்கள் கை கூடும் வாய்ப்புண்டு, ஊக்கத் தோடும் உற்சாகத் தோடும் பணி புரிவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட வர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனம் கண்டு கொள்வீர்கள், வழி பாட்டில் நம்பிக்கை கூடும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு




எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், தூர தேசத்தில் இருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், உற்சாகமான நாள்.




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.




வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காட்டும் நாள், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவார்கள்,புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.




கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விரோதம் விலகும், உடல் நலனில் முன்னேற்றமுண்டு.




தொழில் முயற்சியில் எதிர்பார்த்த திருப்பங்களைக் காணலாம், பகைவிலகி பாசம் கூடும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

தக்க சமயத்தில் எச்சரிப்பவனே உண்மையான நண்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வாவின் 127 ஆவது ஜனன தினம்

(நெளுக்குளம்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவின் 127 ஆவது ஜனன தினம் நேற்று யாழில் நினைவு கூரப்பட்டது.


இந் நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், துரைராசா ரவிகரன் தமிழ் அரசுக்கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவிற்கு யாழில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவிடத்தில் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

குறித்த அஞ்சலியில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட பிரதிநிதிகள் சிலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33-299)





# சந்திரசேகரப் பிள்ளையாருக்கு இன்று கொடியேற்றம்




(யாழ்ப்பாணம்)

நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை மஞ்சத் திருவிழாவும், 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கைலாச வாகனத் திருவிழாவும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்றத் திருவிழாவும் 14ஆம் திகதி சித்திரை வருடப்பிறப்புத் தினமான திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (நி-8-33)

# அனலைதீவு வைத்தியசாலையில் மருத்துவர் விடுதி திறந்து வைப்பு





(யாழ்ப்பாணம்)

அனலைதீவு பிரதேச வைத்தியசாலையில், மத்திய சுகாதார அமைச்சின் 6.3 மில்லியன் ரூபா நிதியில், கடற்படையின் பங்களிப்புடன் மறுசீரமைக்கப்பட்ட மருத்துவர் விடுதி திறப்பு விழாவும், விரிவுபடுத்தப்பட்ட சுகாதார சேவை அறிமுக நிகழ்வும் வைத்தியசாலை வளாகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு பிராந்திய கடற்படை கட்டளைத்தளபதி ரியர் அட்மிரல் கருணாதுங்க, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரன, யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சுசீந்திரன், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஈ.தயாரூபன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (6-8)

# ஒழுங்கற்ற விதத்தில் வாகனங்கள் தரித்து நிறுத்தம்

## சந்தைகள், பிரதான வீதிகளில் நெரிசல்

(யாழ்ப்பாணம்)

முக்கியமான சந்தைகளை அண்மித்த பகுதிகளிலும், சில பிரதான வீதிகளிலும் முறையற்ற விதத்தில் வாகனங்கள் தரித்து நிறுத்தப்படுவதாகவும் இதனால் நெரிசல்கள் ஏற்படுகின்றது என்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் சுட்டிக்காட்டினர்.

கடந்த சனிக்கிழமை ஆளுநர் செயலகத்தில் இடம் பெற்ற கூட்டத்தின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் பற்றாக்குறை இருக்கின்றது என்றும் குறிப்பாக பாடசாலை நாட்களில் பாடசாலைச் சூழலில் கடமையில் ஈடுபட வேண்டியிருப்பதால் இந்த நிலைமை இருக்கின்றது என்றும் பொலிஸார் பதிலளித்தனர்.

தற்போதைய நிலைமையில் பாடசாலை இல்லாத நாட்களிலாவது அந்தப் பகுதிகளில் கடமைகளில் ஈடுபடுமாறு ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார்.

மேலும் சாட்டி உள்ளிட்ட பல்வேறு கடற்கரைகளிலும் விடுமுறை நாட்களில் அதிகளவானோர் வரும் நிலையில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் பொலிஸாரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (நி-6)



யாழ்.இந்து ஆன்மீக பிரசாரகர் சங்கம் முன்னெடுத்த இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவும் திருக்குறள் போட்டிக்கான வட மாகாணம் தழுவிய பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது ஆன்ம விசாரம் என்ற இந்து சமய ஆன்மீக பிரசாரகர் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு மலர் அறிமுகம்செய்து வைக்கப்பட்டது. (படம்:சிவசாந்தன்)

# சோலை வரி உள்ளிட்ட கட்டணங்கள் நிகழ்நிலையில்

(யாழ்ப்பாணம்)

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் விரைவாக சோலைவரி மீளாய்வை நிறைவு செய்யவேண்டுமெனவும், சோலைவரி உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டணங்களை பொது மக்கள் வீடுகளிலிருந்தே செலுத்துவதற்குரிய இணைய மேம்பாடுகளையும் துரிதமாக மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கும் இடையிலான மார்ச் மாதத்துக்கான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

இதன்போது உள்ளூராட்சி மன்றங்களுக்கு மக்கள் சமர்ப்பிக்கும் கட்டட விண்ணப்பங்களின் அனுமதி நகர அபிவிருத்தி அதிகார சபையால் தாமதமடைவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இதன்போதே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபையில் பணியாளர்கள் பற்றாக்குறை இருப்பதாகக் கூறப்பட்டதுடன் அவசர தேவைக்குரிய விண்ணப்பங்களை நேரடியாக ஒப்படைக்குமாறும், எதிர்காலத்தில் இதனை நிகழ் நிலை ஊடாக மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.

உரிய ஆவணங்கள், வரைபடங்களுடன் உள்ளூராட்சி மன்றங்கள் தயாராக இருந்தால் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் விரைவாக ஆதனமதிப்பீடு மேற்கொள்ள முடியும் என விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (நி-6)

# ஸ்ரீ விக்னேஸ்வரப் பெருமானின் அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திக்கம் நீர்வளை ஸ்ரீ விக்னேஸ்வரப்பெருமான் ஆலய குரோதி வருஷ அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் (2025) நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறவுள்ளது.

இவ் அலங்கார உற்சவ தினங்களில் 10 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு கந்தவன சமுத்திரத்தில் தீர்த்தோற்சவமும் மறுநாள் 13 ஆம் திகதி காலை 9 மணிக்கு நறு நீர்க்கேணித் தீர்த்தக் கரையிலும் தீர்த் தோற்சவம் இடம்பெறும் என ஆலய ஆதீன கர்த்தாக்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்த தான முகாம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பழைய மாணவர்கள், தன்னார்வலர்கள் இரத்த தான முகாமில் கலந்து கொண்டு குருதித் தானத்தை வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் முதன்முறையாக ரின் மீன்கள் ஏற்றுமதி

(கொழும்பு)

இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட ரின் மீன்கள் முதற் தடவையாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகேவின் மேற்பார்வையில் மதுரங்குளியிலுள்ள தொழிற்சாலையொன்றில் உற்பத்தி செய்யப்பட்ட ரின் மீன்கள் இவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ரின் மீன்கள் வெளிநாட்டு சந்தைகளில் விற்பனைக்காக ஏற்றுமதி செய்யப்படுவது இதுவே முதற் தடவையாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த ரின் மீன்கள் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் நாளாந்த ரின் மீன் நுகர்வு மூன்று இலட்சம் எனவும் ஒரு நாளைக்கு ஐந்து இலட்சம் ரின் மீன்களை உற்பத்தி செய்யும் திறன் இருப்பதாகவும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார்.

அதன்படி, 2025 ஆம் ஆண்டுக்குள் ரின் மீன் ஏற்றுமதி மூலம் 8 மில்லியன் டொலரை நாட்டிற்குள் கொண்டு வர முடியும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்

நாடளாவிய ரீதியில் தற்போது 21 ரின் மீன் தொழிற்சாலைகள் இயங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந)

# தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் மறுசீரமைப்பு

## வழங்கப்பட்ட கால அவகாசம் நிறைவு

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் மறுசீரமைப்பிற்காக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கால அவகாசம் இன்றுடன் நிறைவடையவுள்ளது.

பராட்டே சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை இன்று வரை இடை நிறுத்தி உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து இந்தச் சலுகைக் காலம் அறிவிக்கப்பட்டது.

உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மற்றும் கடன் தகவல் பணியகத்துடன் இணைந்து கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பொருத்தமான வழிமுறைகள் தயாரிக்கப்படுகின்றன.

இந்நிலையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இதுவரையிலும் வணிக வங்கிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபடாத தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் மறுசீரமைப்பிற்காக இன்றும் சந்தர்ப்பமுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்தது. (ந)

# சி.ஐ.டியில் ஆஜரான டிரான் அலஸ்

(கொழும்பு)

முன்னாள் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நேற்றுக் காலை குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகினார்.

2023 ஆம் ஆண்டு மாத்தறை வெலிகமவில் உள்ள ஒரு ஹோட்டலுக்கு அருகில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் போது கொழும்பு குற்றப்பிரிவில் பணியாற்றிய ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் இறந்தமை தொடர்பாக வாக்கு மூலம் பதிவு செய்வதற்காக முன்னிலையாகினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாக்கு மூலம் பதிவு செய்ய முன்னாள் அமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூத்த அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார்.

வழக்கு தொடர்பான விபரங்கள் முன்னாள் அமைச்சருக்குத் தெரிந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் காரணமாக இந்த வாக்கு மூலம் பதிவு செய்யப்படுவதாக அந்த அதிகாரி மேலும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இந்த சம்பவம் தொடர்பாக தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1975 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 20<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்:BSc, IT Consultant (Singapore)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15275 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 6 1/4<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: BA (பட்டதாரி)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, உத்தியோகம் (பட்டப்படிப்பு)<br>தொ.இ: G/14330 |
| பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: Diploma Course, அரச உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15276 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 35<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்: A/L, London(PR)<br>எதிர்பார்ப்பு: லண்டனில் உள்ள மணமகன்<br>தொ.இ: G/14334 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 31<br>உயரம்: 6' 3"<br>தகைமை/தொழில்: O/L, Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15277 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 52<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில்: வைத்தியர் (கண்)<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer விவாகரத்து ஆனவரும் / பிள்ளை உள்ளவர்களும் பரவாயில்லை. (விவாகரத்து 3 வயதில் ஆண் குழந்தை இருக்கிறது.)<br>தொ.இ: G/14337 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# போதைப்பொருட்களுடன் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

குஷ், ஐஸ் மற்றும் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட்களுடன் சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு 14 பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் வெளிநாட்டிலிருந்து நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப்பொதிகளிலிருந்து ஒரு கிராம் 485 மில்லிகிராம் குஷ் , 5 கிராம் 44 மில்லிகிராம் ஐஸ் மற்றும் 190 மில்லிகிராம் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ந)



# நீர்வேலி-மாதனையில் இன்றும் நாளையும் கொடியேற்றம் (01,02-04-2025)

இரா.தில்லைராஜன்

நிலவுபுகழ் மாதனையூர் நீர்மையுடன் அமையவங்கு
தலமதிலே வரமருளும் தெய்வம்
பலமுடைய வேம்பின் நிழலமர்ந்த காளிக்கு
புகழமிர்தக் கொடியேறும் நாளை
நிலமதிலே நீர்வேலி வெளித்தோட்டக் காளியம்மை
நிகரிலாத் தன்னருளைக் கூறவெண்ணி
இலங்கிடுதன் கொடியேறி அமர்ந்திடுவாள் இன்று
இன்னருளின் முகத்தோடு சிரித்து

வந்துசேர் மெய்யடியார் மொழிகின்ற இறைவாழ்த்தும்
சிந்துகின்ற தேவார ஒலிக்கூட்டும்
முந்தவே மலர்தூவி வாழ்த்துக்கள் கூறவும்
கந்தனும் கணபதியும் காளியோடு
விந்தைசேர் கவினாய் ஊர்வலம் போகவே
வியப்பென அருளொளி பரவிடலால்
வந்திடும் வாழ்வுக்கு வளமான வெற்றியது
தங்கிய குற்றங்களும் மறைந்து விடும்!

சிரமேற் கைகூப்பி சிந்தையில் காளியிடம்
வரமே கேட்கின்ற பான்மையராய்
விரதமாய்க் கற்பூரச் சுடரொளியை ஏந்தியே
அடியழித்துக் குறைதீர்க்கும் செய்கையராய்
உரமோடு உள்ளத்தா லுருகியே மெய்சிலிர்க்கும்
உண்மையாம் பக்தர்கள் பின்தொடர
தரமான அலங்கார அழகோடு காளியம்மை
தான்வரும் ஊர்வலமே போக

தாயிங்கு நீதான் சரணமம்மா என்றும்
தயவோடு காப்பதுன் கடமையம்மா
நீயிங்கு அமர்ந்தாய் நிழல்தரும் காரணியாய்
நிம்மதி கிடைத்ததே பெருவரமாய்
ஊருள மக்களுன் கழலடி தலைச்சுமந்தே
உயர்வாம் துணையெனப் போற்றுகின்றார்
பேருள நீரவையும் மாதனையும் வாழ்த்துகின்ற
பெரும்புகழ் காளியே சுகமளிப்பாய்

(3743)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# அணுசக்தி ஒப்பந்தம் செய்யாவிட்டால் ஈரான் மீது குண்டு வீசுவோம்!

## மிரட்டும் அமெரிக்கா

**(வோஷிங்டன்)**

**ஈரான் தனது அணுசக்தித் திட்டம் தொடர்பாக வோஷிங்டனுடன் ஒரு உடன்பாட்டிற்கு வரவில்லை என்றால் குண்டுவீச்சு மற்றும் இரண்டாம் நிலை வரிகளை விதிக்க நேரிடும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஞாயிற்றுக்கிழமை ஈரானை அச்சுறுத்தினார்.**



நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம்பேசிய ட்ரம்ப், டெஹ்ரான் ஒரு ஒப்பந்தம் செய்கிறதா என்பதைப் பொறுத்து இரண்டாம் நிலை வரிகள் குறித்து ஒரு முடிவை எடுக்கவுள்ளோம்.

அதற்கு இரண்டு வாரங்கள் அவகாசம் கொடுப்போம். எந்த முன்னேற்றத்தையும் காணவில்லை என்றால் அவற்றை விதிப்போம். நாங்கள் இப்போது அவற்றை விதிக்கவில்லை எனத் தெரிவித்தார்.

2017-21 ஆம் ஆண்டு வரையான தனது முதல் பதவிக் காலத்தில், ட்ரம்ப் அமெரிக்காவை ஈரானுக்கும் உலக வல்லரசுகளுக்கும் இடையிலான 2015 ஒப்பந்தத்திலிருந்து விலக்கிக் கொண்டார்.

அது பொருளாதாரத் தடைகள் நிவாரணத்திற்கு ஈடாக டெஹ்ரானின் சர்ச்சைக்குரிய அணுசக்தி நடவடிக்கைகளுக்கு கடுமையான வரம்புகளை விதித்தது.

ட்ரம்ப் மீண்டும் அமெரிக்கத் தடைகளை விதித்தார். அப்போதிலிருந்து, இஸ்லாமியக் குடியரசு அதன் யுரேனியம் செறிவூட்டல் திட்டத்தை விரிவுபடுத்துவதில் ஒப்புக்கொள்ளப்பட்ட வரம்புகளை மிக அதிகமாக மீறியுள்ளது.

ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் அல்லது இராணுவ விளைவுகளை எதிர்கொள்ள வேண்டும் என்ற ட்ரம்பின் எச்சரிக்கையை டெஹ்ரான் இதுவரை நிராகரித்துள்ளது. (நி)

# மீண்டும் நிலநடுக்கம்

## மியான்மாரில் தொடரும் சோகம்

(பாங்கொங்)

சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டு மூன்று நாட்களைக் கடந்த நிலையில், மியான்மாரில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. இது மக்களைப் பெரிதும் அச்சமடைய வைத்துள்ளது. ஒரு பக்கம் வெயில் கொளுத்தும் நிலையில், எங்கும் பிணவாடை வீசுவதால், மீட்புப் பணியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நம் அண்டை நாடான மியான்மாரில், கடந்த 28ஆம் திகதி சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில், 7.7 ஆக பதிவான இந்த நிலநடுக்கம், மியான்மாரில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அண்டை நாடான தாய்லாந்தின் பாங்கொக் நகரிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அங்கும் சில கட்டடங்கள் இடிந்து விழுந்ததில், பலர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலநடுக்கம், மியான்மார் தலைநகர் நய்பிடாவ், மண்டாலே நகரங்களில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

பல உயர்ந்த கட்டடங்கள் இடிந்து விழுந்து, எங்கு பார்த்தாலும் கொங்கிரீட் குவியல்களாக காட்சி அளிக்கின்றன.



கடந்த இரண்டு நாட்களில், ஏழுமுறை நில அதிர்வுகள் ஏற்பட்டன. இந்நிலையில், மண்டாலே பகுதியில், நேற்று முன் தினம் காலை 5.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனால், மக்கள் அலறியடித்தபடி, பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தனர்.

வீடுகள் இடிந்து விழுந்ததுடன் தொடர்ந்து ஏற்பட்டு வரும் நில அதிர்வுகளால், பெரும்பாலான மக்கள், சாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்நிலையில், மீண்டும் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

சாலைகளில் பெரிய வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதால், மீட்புப் பணிக்கு கனரக வாகனங்களை எடுத்துச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான பகுதிகளில், அந்தந்தப் பகுதி மக்களே, கைகளாலும், சிறிய கருவிகளாலும், இடிபாடுகளை அகற்றி வருகின்றனர்.

மீட்புப் படையினரால், பல இடங்களுக்கு இன்னும் செல்ல முடியவில்லை.

இதனால், இந்த இரண்டு பெரிய நகரங்களைத் தவிர மற்ற இடங்களில் எந்தளவுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை கூட தெரிந்து கொள்ள முடியவில்லை.

மின்சாரம் துண்டிப்பு, தொலைத்தொடர்பு வசதிகள் துண்டிப்பு ஆகியவை, மீட்புப் பணிகளை வேகப்படுத்த முடியாத நிலையை உருவாக்கி உள்ளன. முக்கிய விமான நிலையங்களிலும் நிலநடுக்கத்தால் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதால், வெளி நாடுகளில் இருந்து மீட்புக் குழுவினர் வருவதில் தாமதத்தை ஏற்படுத்தி உள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ட்ரம்பின் மிரட்டலால் தாக்குதலுக்கு தயாராகும் ஈரான்!

## பரபரப்பில் உலக நாடுகள்



(டெஹ்ரான்)

**அணு ஆயுத உற்பத்திக்குத் தடை விதிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்தால் குண்டுவீசித் தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், அதிநவீன ஆயுதங்களுடன் தாக்குதல் நடத்த ஈரான் ஆயத்தமாகியுள்ளது. இது உலக நாடுகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்காக உலக நாடுகளால் போடப்பட்ட ஒப்பந்தத்தை மீறி, அணு ஆயுத உற்பத்தியை அதிகரித்து வருவதாக ஈரான் மீது குற்றச்சாட்டு எழுந்தது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டுக்களை ஈரான் தொடர்ந்து மறுத்து வருகிறது.

இதனிடையே, ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதைத் தடுக்க, புதிய ஒப்பந்தத்தை கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முயற்சித்து வருகிறார். இது தொடர்பாக ஈரானுக்கு அவர் கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில், "அணு ஆயுத உற்பத்திக்கு தடை விதிக்கும் விதமான, புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தொடர்பாக ஈரான் பேச்சு வார்த்தைக்கு உடன்பட வேண்டும். தவறினால், இராணுவத்தை பயன்படுத்த வேண்டியிருக்கும்," என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

மேலும், அணு ஆயுத உற்பத்திக்குத் தடை விதிக்கும் ஒப்பந்தத்திற்கு உடன்பட மறுத்தால், ஈரான் மீது குண்டுவீசி தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பகிரங்க எச்சரிக்கை விடுத்தார். மேலும், ஈரான் மீது 2ஆவது கட்டவரி விதிப்புகளைச் சுமத்த வேண்டி இருக்கும் என்றும் எச்ஙரித்தார்.

ஆனால், இதனைப் பற்றி அலட்டிக் கொள்ளாத ஈரான், அமெரிக்காவுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த மறுத்து வருகிறது.

இந்த நிலையில், அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, தங்களிடம் உள்ள அதிநவீன ஆயுதங்கள் குறித்த வீடியோவை ஈரான் அதிகாரிகள் சமூக வலைத் தளங்களில் வெளியிட்டு வருகின்றனர். நிலத்தடி ஏவுகணைத் தளங்களில் ஹெய்பர் ஷேகன், ஹஜ் குவாசெம், செஜ்ஜில், இமாத் உள்ளிட்ட தொலை துார இலக்குகளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகள் தயார் நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் மீது குண்டு வீசித் தாக்குதல் நடத்தப்படும் என்று ட்ரம்ப் எச்சரித்த நிலையில், அமெரிக்க நிலைகள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்த ஈரான் தயாராக இருப்பதாக அந்நாட்டு பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன. இது உலக நாடுகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி)

## ஹிமாச்சல் பிரதேசத்தில் நிலச்சரிவு 6 பேர் உயிரிழப்பு

(டில்லி)

ஹிமாச்சல் பிரதேசத்தில் கடந்த சிலநாட்களாக நிலவி வரும் கடும் மழையுடனான காலநிலையினால் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக, மரமொன்று வேருடன் சாய்ந்து அப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் மீது விழுந்ததில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

குல்லு மாவட்டத்தில் உள்ள மணிகரன் என்ற பகுதியிலேயே கடந்த சனிக்கிழமை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும் அப்பகுதியில் காணப்பட்ட மிகவும் பழமையான மரமொன்றே இவ்வாறு வேருடன் சாய்ந்து விழுந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும், 7 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குல்லு, மண்டி உள்ளிட்ட இடங்களில், பலத்த சூறைக் காற்றுடன் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் முன்னரே எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தூங்குவதற்கு முன் செல்போன் பார்ப்பவர்களா? அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

(வோஷிங்டன்)

தூங்குவதற்கு முன்பு செல்போனில் வீடியோ பார்த்தால் மூளை பாதிப்பு ஏற்படும் அபாயம் இருப்பதாக அமெரிக்கப் புற்றுநோய் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்க புற்றுநோய் சங்கத்தின் ஆராய்ச்சியாளர்கள், செல்போன்களைப் பயன்படுத்துவது தொடர்பாக சமீபத்திய ஆய்வு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். இந்த ஆய்வானது செல்போன்களை அதிகமாக பயன்படுத்தும் 1,22,000 பேரிடம் நடத்தப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

இவர்களில் 41 சதவீதம் பேர் தினமும் தூங்குவதற்கு முன் தொலைபேசியைப் பயன்படுத்தும் நபர்களாகவும், 17.4 சதவீதம் பேர் அந்த நேரத்தில் தங்கள் தொலைபேசியைப் பயன்படுத்துவதில்லை என்றும் கூறியுள்ளனர்.

அந்த நேரத்தில், தொலைபேசிகளைப் பயன்படுத்தாதவர்களை விட, பயன்படுத்தியவர்களுக்கு தூக்கப் பிரச்சினை ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக இருந்தது.

தொலைபேசி அல்லது பிற டிஜிற்றல் திரையிலிருந்து வெளியாகும் வெளிச்சம், மெலடோனின் வெளியீட்டை தாமதப்படுத்துகிறது. இதன் விளைவாக இயற்கையான தூக்கம் பாதிக்கப்படுகிறது.

படுக்கைக்குச் செல்வதற்கு முன் 30 நிமிடங்கள் சமூக ஊடகங்களில் செலவிடுவதால், தூக்கக் கோளாறுகள் மற்றும் அமைதியற்ற தூக்கம் ஏற்படும்.

தூக்கமின்மை ஒரு நபரின் ஆரோக்கியத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மேலும் இந்தப் பழக்கமானது மனித உடலின் உயிரியல் கடிகாரத்தையே சீர்குலைத்துவிடும் என்று ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் விதிமீறல் 5 முறைப்பாடுகள் பதிவு




(கொழும்பு)

2025 உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக வன்முறைச் செயல்கள் மற்றும் தேர்தல் விதி முறை மீறல் தொடர்பாக நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் களுத்துறை பொலிஸ் பிரிவில் உள்ள அங்கலவத்த பொலிஸ் நிலையத்தில் மிரட்டல்களுடன் தாக்குதல் நடத்த முயற்சித்ததாக முறைப்பாடு அளிக்கப்பட்டது.

மேலும் இது குறித்து அங்கலவத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையில் தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டு தொடர்பில் 5 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

தலாத்துஓய, தனமல்வில, அளுத்கம, மாத்தளை மற்றும் கலேவெல ஆகிய பொலிஸ் பிரிவுகளிலிருந்து இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. (நி)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 450 | 400 | 500 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 550 | 500 | 400 | 600 |
| தக்காளி | 300 | 200 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 260 | 250 | 200 |
| கோவா | 300 | 300 | 250 | 300 |
| கரட் | 800 | 700 | 800 | 700 |
| பூசணி | 200 | 150 | 150 | 200 |
| புடோல் | 150 | 250 | 150-200 | 300 |
| வாழைக்காய் | 150 | 100 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 160 | 180 |
| பாகற்காய் | 400 | 550 | 500 | 600 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 280 | 200 | 300 |
| பயற்றங்காய் | 400 | 300 | 300 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 300 | 250 | 300 |
| கறிமிள்காய் | 800 | 600 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 2000 | 2500 | 2000 | 2800 |
| போஞ்சி | 400 | 550 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 400 | 250 | 450 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 150 | 150 |
| தேசிக்காய் | 200 | 250 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250-300 | 150 | 180-220 |
| இராசவள்ளி | 600 | 500 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 200 | 400 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | - | 60 | 200 |

## இன்று ஒரு தகவல் 347

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# இருவகைத் துன்பம்!

இந்த உலகத்திலே இரண்டு வகையான துன்பங்கள் உண்டு என்கிறார் பெர்னார்ட்ஷா.

நாம் ஆசைப்பட்டது கிடைக்கவில்லை என்றால் அதனாலே நாம் படும் துன்பம் ஒருவகை. நாம் ஆசைப்பட்டது கிடைத்துவிட்டால் அதனால் வரும் துன்பம் ஒருவகை. அது எப்படி.

ஆசைப்பட்டது கிடைக்கவில்லை என்றால் துன்பம். ஆசைப்பட்டது கிடைத்தால் அது இன்பம். அது எப்படி துன்பமாகும்.

கொஞ்சம் யோசித்துப்பார்த்தால் இதைப் புரிந்து கொள்ளலாம். இந்தக் காலத்து அப்பாக்களைக் கேட்டுப் பாருங்கள். அவர்கள் சொல்லுவார்கள்.

குழந்தை பிறக்கும் மட்டும் பிள்ளை இல்லையே என்று கவலைப்பட்டேன். குழந்தை பிறந்ததும் பிள்ளை பிறந்துவிட்டதே என்று கவலைப்படுகிறேன். இந்தக் காலத்து அப்பா மட்டும் இல்லை அந்தக் காலத்து அப்பாவும் இப்படித்தான் கவலைப்பட்டார். யார் அவர்? தசரதர் தான்.

குழந்தைகள் எல்லாம் பிறப்பதற்கு முன்னைய காலத்தில் ஒரு நாள் தசரதர் வேட்டையாடச் சென்றார்.

அப்போது காட்டிலே தூரத்திலே யானை தண்ணீர் குடிப்பது போல சத்தம் கேட்டது. மரம், செடி, கொடி, இருந்ததால் அதைக் கண்ணால் பார்க்க முடியவில்லை. சத்தம் மட்டும் கேட்டது. உடனே தசரதர் சத்தம் வந்த திசையை நோக்கி அம்பை விட்டார் அவ்வளவு தான். ஐயோ அம்மா, அப்பா என்று கத்தும் சத்தம் அங்கிருந்து வந்தது. அது மனிதக்குரல்! இவர் அங்கே ஓடிப்போய் பார்க்கிறார்.

அங்கே குளத்திலே தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த ஒரு முனிகுமாரன் மேலே அம்பு பாய்ந்திருந்தது! அவன் தன் கண்ணில்லாத அப்பா, அம்மாவுக்காக தண்ணீர் எடுக்க வந்தவன். இப்போது சாகக் கிடக்கிறார். தசரதர் பதறிப்போய் நிற்கிறார்.

அவன் இவரைப் பார்த்து நான் இறப்பதைப் பற்றி கவலைப்படவில்லை கண்ணில்லாத எனது பெற்றோர் அதோ அந்த மரத்தடியில் இருக்கிறார்கள். அவர்கள் குடிப்பதற்கு இந்தத் தண்ணீரைக் கொடுங்கள் என்றான்.

அந்தக் கண்ணில்லாத முனிவர் தசரதனுக்கு சாபம் கொடுக்கிறார். நாங்கள் எப்படி புத்திர சோகத்தாலே சாகப்போகிறோமோ அதே மாதிரி நீயும் சாகப் போறாய்! ஆனால் உன் புத்திரன் சாகமாட்டான். அவன் பிரிவினாலே நீ சாவாய்! என்றார்.சாவதைப் பற்றி தசரதன் முதலிலே கவலைப் படவில்லை. ஏனென்றால் அவருக்கு பிள்ளை இல்லை! ஆனால் ராமன் பிறந்ததும் எப்போது ராமன் தன்னை விட்டுப் பிரிவானோ தனக்கு சாவு வருமோ என்று யோசிக்க ஆரம்பிக்கிறார்.

அதனாலேதான் விசுவாமித்திரர் ராமனைத் தா என்று சொன்னதும் மார்பிலே வேல் நுழைந்து அதனாலே உண்டாகும் புண்ணிலே நெருப்பு நுழைந்தால் எப்படி இருக்குமோ.. அப்படி தவித்தார் தசரதர்.

கண்ணிலான் பெற்றிழந்தான் என உழந்தான்.. என்கிறார் கம்பர். அதாவது கண் இல்லாதவன் கண்ணைப் பெற்று அதை மீண்டும் இழந்தால் எப்படித் தவிப்பானோ அப்படித் தவிக்கிறார்.

இங்கே கண்ணில்லை என்பது சாபம் கொடுக்கும் முனிவரையும் குறிக்கும். அவர் எப்படித் தம்முடைய மகனை இழந்து தவித்தாரோ அப்படித் தவிப்பார் என்று அர்த்தம்.

இப்போது தரசரதன் நிலையைப் பாருங்கள். பெர்னாட்ஷா சொன்னதையும் நினைத்துப் பாருங்கள். ஆசைப்பட்டது கிடைக்கவில்லை என்றாலும் துன்பம். ஆசைப்பட்டது கிடைத்தாலும் துன்பம்.சரிதானே?

ஒரு திருடன் ஒரு கோவில் வாசலிலே ஒரு மரத்தடியிலே கையையும் காலையும் உதறிக்கொண்டு வாள் வாள் என்று கத்திக் கொண்டு இருந்தான். அவன் சிநேகிதன் வந்தான் ஏன் இப்படிக் கத்துகிறாய் என்றான்.

சாமி கழுத்திலே இருக்கும் நகையைத் திருடனும் என்று ஆசைப்பட்டேன். கிடைத்து விட்டது.

அதற்குப் பிறகு அந்த நகையை அதோ அந்தக் கருங்கல் தூணிலே இருக்கிற சிங்கச் சிலையின் வாய்க்குள்ளே ஒளித்து வைத்து விட்டேன். இன்று காலையிலே வந்து சிங்கத்தின் வாயிலே கையை விட்டேன் நகையை எடுப்பதற்குள் அது கடித்து விட்டது. அதுதான் கத்துகிறேன் என்றான்.

கருங்கல் சிலை எப்படி கடிக்கும் என்றான் அவன்.கடித்தது அந்த சிலை இல்லை அதன் வாய்க்குள் இருந்த தேள்! என்று சொல்லிவிட்டு மறுபடியும் துள்ள ஆரம்பித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.போதனா வைத்தியசாலையில் குழந்தைகளுக்கான அதிதீவிர சிகிச்சைப்பிரிவு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வைத்திய நிபுணர் சி.நித்தியரூபன், துறைசார் வைத்திய நிபுணர்கள் மற்றும் தாதியர் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நான்கு குழந்தைகளை ஒரே தடவையில் பிரசவித்த தாய் ஒருவரால் குறித்த சிகிச்சைப் பிரிவு திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அம்புலன்ஸ் படகுச்சேவை வருட இறுதிக்குள் கிடைக்கும்

## ஆளுநர் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு பிரதேசத்துக்கான நோயாளர்காவு வண்டி படகுச்சேவை இந்த ஆண்டு இறுதிக்குள் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

அனலைதீவு பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அனலைதீவு பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில் பலகோரிக்கைகள் ஆளுநரிடம் முன்வைக்கப்பட்டன. அனலைதீவுக்கான நோயாளர் காவுவண்டி படகுச்சேவை, பிரதேசத்தினுள் செயற்படும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து அடிக்கடி பழுதடைகின்றமையால் புதிய பேருந்து, இறங்குதுறை புனரமைப்பு, வீதிகளின் புனரமைப்பு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் நீங்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்னராகவே, அரசாங்கம் யாழ்ப்பாணத்துக்கு வழங்கவுள்ள புதிய பேருந்துகளை நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவுகளுக்கு வழங்க வேண்டும் என கேட்டுள்ளோம் என ஆளுநர் இதன்போது தெரிவித்தார். (6-8)

## ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சனசமூக நிலைய முன்றலில் காலை 6 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், நிலைய சிறார்களுக்கான ஓட்டம் மற்றும் நிலைய அங்கத்தவர்களுக்கான மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்டம் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6)

# அக்கரை வெளிவீதி

## புனரமைப்பு பணி ஆராய்வு



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட கொக்குத்தொடுவாய் அக்கரை வெளி மாரியாமுனை வீதி புனரமைப்புத் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான துறைசார்ந்த அதிகாரிகள் கடந்த சனிக்கிழமை கள விஜயம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கடந்த வாரம் வடமாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக குறித்த களவிஜயம் இடம்பெற்றது.

2025 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டத்திலும் கிராமிய வீதி அபிவிருத்தி திட்டத்திலும் குறித்த வீதியானது முக்கியத்துவத்தின் அடிப்படையில் கட்டம் கட்டமாக புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என கடந்தவாரம் இடம்பெற்ற கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்திருந்தார்.

இதற்கான மீள் கள ஆய்வாக குறித்த கள விஜயம் இடம்பெற்றது. இதன்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர், கரைதுறைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர், துறைசார்ந்த ஏனைய உத்தியோகத்தர்கள், குறித்த பகுதி விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (நி-6-299)

# நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற நோன்புப் பெருநாள் தொழுகை

(கொழும்பு)

புனித நோன்பு பெருநாளினை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நேற்று பெருநாள் தொழுகையும் பிரசங்கமும் பள்ளிவாசல்களில் நடைபெற்றது.

இஸ்லாமியர்கள் தமது புனித பெருநாள் தொழுகையை நிறைவேற்றிய பின் அனைவரும் தமது பெருநாள் வாழ்த்துக்களை தமது உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து தமது பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளும் முகமாக உறவினர்கள் நண்பர்கள் மற்றும் அயலவர்களின் வீடுகளுக்கு சென்று பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதோடு உணவுப் பண்டங்களை பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (6)

# கிண்ணத்தை சுவீகரித்தது

## திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்




(யாழ்ப்பாணம்)

சுவிட்சர்லாந்து அல்வாய் ஒன்றியத்தின் 8 ஆவது விளையாட்டு விழாவில் பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலைசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இதில் பேற்றுக்கெய்வோனாக விளையாடிய திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக வீராங்கனை அகல்யா, மனோகரா விளையாட்டுக் கழக வீராங்கனை சாகித்தியா ஆகியோரின் ஆட்டம் அனல் பறந்தது.

இருப்பினும் ஆட்ட நேர முடிவில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி 18:15 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது. (நி-6-90)

# வலைப்பந்தாட்ட போட்டியில் சம்பியனான நாவலடி கலைமகள்



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட போட்டியில் நாவலடி கலைமகள் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டம் நேற்று திங்கட்கிழமை அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் நாவலடி கலைமகள் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய கலைமகள் அணி ஆட்ட நேர முடிவில் 15:4 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டனர். (நி-6-90)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 736





அமுதா! எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. என் சித்தம் என் சுவாதீனத்தில் இல்லை. என் அத்தைக்கு இவர் தந்தை செய்த துரோகத்தை நினைத்துப் படகைக் கவிழ்த்தாலும் கவிழ்த்து விடுவேன். நீயே படகை விட்டுக் கொண்டுபோ!"

"அப்படியே ஆகட்டும் நானே இளவரசரைக் கொண்டு போய் விட்டு வருகிறேன். நீ என்ன செய்வாய்?"

"நான் வானதியைப் பின் தொடர்ந்து சென்று, அவள் தலையில் ஒரு கல்லைத் தூக்கிப் போடுவேன்!" இவ்விதம் கூறிக்கொண்டே பூங்குழலி குனிந்து கால்வாயின் கரையில் கிடந்த ஒரு கூழாங்கல்லை எடுத்தாள்.

அச்சமயம் கால்வாயின் கரையில் இருந்த அடர்த்தியான தென்னந்தோப்புக்குள்ளிருந்து கம்பீரமான ராஜ ரிஷபம் ஒன்று வெளியேறி வந்தது. அதைப் பார்த்த பூங்குழலி தன் கோபத்தை அக் காளையின் மேல் காட்ட எண்ணிக் கூழாங்கல்லை அதன் பேரில் விட்டெறிந்தாள்.

அந்தக் கூழாங்கல் ரிஷபராஜனின் மண்டைமீது விழுந்தது. காளை ஒரு தடவை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டது. கல் வந்த திசையை உற்றுப் பார்த்தது.

ஐயோ பூங்குழலி! இது என்ன காரியம்? மாட்டின் மீது கல்லை விட்டெறியலாமா? என்றான் அமுதன்.

எறிந்தால் என்ன?

வாயில்லாத ஜீவன் ஆயிற்றே! அதற்குத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் தெரியாதே?

என் குலத்தில் வாயில்லாத ஊமைப் பெண் ஒருத்தி இருந்தாள்! அவளுடைய மனத்தைப் புண்படுத்தியவர்களை என்ன செய்வது? அவள் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள முடியாமையால் தானே அவளை அரசகுமாரன் ஒருவன் வஞ்சித்து அவளுடைய வாழ்க்கையைப் பாழாக்கினான்? உன் அத்தைக்கு யாரோ செய்த அநீதிக்கு இந்த மாடு என்ன செய்யும்.

இந்த மாடு அப்படியொன்றும் நிராதரவான பிராணி அல்ல. இதற்குக் கூரிய கொம்புகள் இருக்கின்றன. தன்னைத் தாக்க வருபவர்களை இது முட்டித் தள்ளலாம்.

காது கேளாத, பேச முடியாத உலகமறியாத ஏழைப் பெண்ணால் என்ன செய்ய முடியும்? என்னிடம் அப்படி ஒரு இராஜ குமாரன் நடந்து கொண்டால் நான் அவனை இலேசில் விடமாட்டேன்!

இலேசில் விடமாட்டாய்! காளைமாட்டின் மேல் கல்லை எடுத்து தெறிவாய்! அதுவும் கால்வாயில் படகில் இருந்து கொண்டு மாடு உன்னிடம் வந்து உன்னை முட்ட முடியாதல்லவா? என்னை முட்ட முடியாவிட்டால் வேறு யாரையாவது அந்தக் காளை முட்டித் தள்ளட்டுமே!"

உனக்கு யார் மேலோ உள்ள கோபத்தை இந்தக் காளையின் மீது காட்டியது போல் அல்லவா?

இவர்களுடைய சம்பாஷணையை என்னவோ அந்த ரிஷபத்தினால் அறிந்துகொள்ள முடியவில்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## தாத்தாவின் அறிவு



(நேற்றைய தொடர்ச்சி)

தன்னுடைய தாத்தாவிடம் எங்களுக்கு இப்ப விவசாயம் செய்ய ஒரு பிடி விதைகள் கூட இல்லை என்று சொன்னான் அந்த இளம் விவசாயி. உடனே அறிவிலும் அனுபவத்திலயும் பெரியவரான அந்தத் தாத்தா அவனுக்கு யோசனை ஒன்று சொன்னார்

தாத்தா சொன்னபடி விதைகளைத் தேடிப் போனான். அவனுடைய தாத்தா சொன்ன மாதிரி அவனுக்கு நிறைய விதைகள் கிடைத்தன. அந்த விதைகளை வைத்து விவசாயம் செய்ய ஆரம்பித்தான்.

இந்த விடயத்தை கேள்விப்பட்ட அரசன் அவனைக் கூப்பிட்டு விசாரித்தார்.

பயந்து போன அந்த இளம் விவசாயி தன்னுடைய தாத்தாவைப் பற்றிச் சொன்னான். உடனே காவலாளிகளை அனுப்பி அந்தத் தாத்தாவைப் பிடித்துக் கொண்டு வரச் சொன்னான் அந்த அரசன்.

அரண்மனைக்கு வந்த அந்த வயதான தாத்தாவிடம் எப்படி நீங்கள் மட்டும் விதைகளைக் கண்டு பிடித்து விவசாயம் செய்கிறீர்களா என்று கேட்டான் அந்த அரசன்

அதற்கு அந்த தாத்தா சொன்னார் இந்த உலகத்தில ஒரு பயனுள்ள பொருள் களுக்கு உணவாகவோ அல்லது மதிப்பாகவோ இருந்தால் மட்டுமே ஒருத்தன் அதை சேமித்து வைப்பான்.

அதுமாதிரித்தான் விதைகளை உணவா எடுத்துக் கொள்வது நாம் மட்டும் இல்லை பறவைகளும் தான். அதனால் பறவைகள் அதிகம் வாழ்கின்ற பழைய பெரிய மரங்களுக்கு அடியில் பறவைகளினுடைய எச்சம் இருக்கும். அதுல கண்டிப்பா விதைகள் இருக்கும் என்று சொன்னேன்.

அதே மாதிரி விதைகளை மதிப்பு மிக்கதா நினைச்சு சேமிச்சு வைக்கிறது எறும்புகள் தான், அதனால் எறும்புகள் கூட்டமா வாழுற புற்று எல்லாவற்றையும் தேடிப் பார்க்க சொன்னேன்.

நான் சொன்னது மாதிரியே என்னுடைய பேரன் விதைகளை தேடிக் கொண்டு வந்து விவசாயம் செய்கிறான் என்று சொன்னார்.

அப்போது தான் மூத்தவர்களின் அனுபவ அறிவுக்கு முன்னால் இளைஞர்கள் எப்போதும் தோற்றுப் போகிறார்கள்" என்று புரிந்து கொண்டார் அந்த அரசன்

உடனே நாட்ட விட்டு வெளியேறின எல்லா முதியவர்களையும், வயசான அமைச்சர்களையும் சேதி சொல்லி திரும்ப கூட்டிக் கொண்டு வந்தான்

திரும்பி நாட்டுக்கு வந்த அனுபவசாலிகளின் பேச்சு கேட்டு நல்லபடியாக ஆட்சி செய்ய ஆரம்பித்தான் அந்த புது அரசன்.

கொஞ்ச நாட்களுக்கு பின்பு அந்த நாட்டுக்கு திரும்பி வந்த பழைய அரசர், தன்னுடைய மகன் தன்னைவிட புத்திசாலியாக நாட்டை ஆட்சி செய்வதைப் பார்த்து அவனையே நிறைந்த அரசனாக அறிவித்தார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குள் இருக்கும் பண்புகள்தான் வெளியுலகில் எனக்குக் கிடைக்கும் மரியாதைக்கு ஆதாரம்.

— யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பேரினவாதிகள் விரும்பாத பலாலி விமான நிலையம்

பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்தப்படும். அடுத்துவரும் நான்கு மாதங்களில் சர்வதேச விமான நிலையத்துக்கான அத்தனை கட்டமைப்புக்களும் செய்யப்படும் என விமான சேவைகள் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (30) யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, பலாலி விமான நிலையத்துக்குச் சென்றிருந்தார். அங்குள்ள நிலைமைகளைப் பார்த்த பின்பு இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

உண்மையில் பலாலி விமான நிலையம் என்பது பலாலி சர்வதேச விமான நிலையம் என்பதாகவே அமைந்துள்ளது.

ஆனால் யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்குமான விமான சேவை மட்டுமே இங்கு நடந்தாகிறது. இப்போதுதான் திருச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்குமான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இஃது ஒருபுறம் இருக்க, யாழ். கலாசார மண்டபத்தில் நடந்த பட்டிமன்ற நிகழ்வுக்காக வருகைதந்த பட்டிமன்றப் பேச்சாளர் ராஜா அவர்கள் பேசும்போது; உலகிலேயே பலாலி விமான நிலையம் போல ஒரு விமான நிலையத்தை நான் காணவில்லை.

என்னுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓர் அன்பர் விமானத்தில் வந்திருந்தார். அவர் விமானத்தால் இறங்கியதும் மாமா! மோட்டார் சைக்கிளை ரெடியாக வைத்திருங்கள் என்று கூறினார். உடனடியாக மோட்டார் சைக்கிளும் தயாராகியது.

அதனால்தான் சொல்கிறேன் இப்படியொரு விமான நிலையத்தை உலகில் எங்கும் காண முடியாது. தயவு செய்து அரசாங்கத்திடம் கூறி இந்த விமான நிலையத்தின் தரத்தை உயர்த் துங்கள் என்றார்.

உண்மையில் பலாலி விமான நிலையம் இயங்குவதில் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த, மைத்திரி, கோட்டாபய, ரணில் ஆகியோருக்கு அறவே உடன்பாடில்லை.

இந்திய மத்திய அரசின் ஆக்கினை காரணமாக சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்குமான விமான சேவை நடைபெறுகிறதேயன்றி, மற்றும்படி தமிழ் மக்கள் இந்தியாவுக்குச் சென்று வருவதற்கு பலாலி விமான நிலையம் அவசியமானதென்ற அடிப்படையில் அது இயங்கவில்லை.

ஆம், பலாலி விமான நிலையம் என்பது அடிமட்ட சிங்களக் கிராமங்களில் இருக்கக் கூடிய பழைய புகையிரத நிலையம் போன்றது.

அதாவது எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல், ஏதோ கடன்கழிப்புக்காகவே பலாலி விமான நிலையம் இயங்குகிறது.

இந்நிலையில் அங்கு நேரில் சென்று பார்த்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க; நான்கு மாதங்களில் பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையத்துக்குரிய கட்டமைப்புகளுடன் மாற்றப்படும் எனக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மீது தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். நாட்டு மக்களை ஏமாற்றுகின்ற எண்ணம் ஜனாதிபதி அநுரவிடம் அறவே இல்லை என்பதை தமிழ் மக்கள் ஏற்றுள்ளனர்.

எனவே பலாலி விமான நிலையம் சர்வதேச தரத்துக்கு உயரும் என்ற நம்பிக்கை இப்போது தமிழ் மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

# இந்தியாவுடனான ஒப்பந்தம் பகிரங்கப்படுத்த வேண்டும்

## அரசிடம் கேட்கிறது ஐ.ம.சக்தி

*(கொழும்பு)*

இந்தியாவுடனான நட்புறவைப் பேணுவதில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை. ஆனால் நாடு என்ற ரீதியில் பிறிதொரு நாட்டுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தம் தொடர்பில் மக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். அந்தவகையில் இந்தியாவுடன் செய்து கொள்ளப்படவுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் அரசாங்கம் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

கண்டியில் நேற்று (31) ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின் போது கையெழுத்திடப்படவுள்ளதாகக் கூறப்படும் ஒப்பந்தங்கள் குறித்து பல்வேறு செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால் அவை தொடர்பில் நாட்டுக்கோ அல்லது பாராளுமன்றத்துக்கோ அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை. தேசிய மக்கள் சக்தியின் தலைவர் எதிர்க்கட்சியிலிருந்த போது இராஜதந்திர ஒப்பந்தங்கள் தொடர்பில் கூறிய கதைகள் இன்றும் எமக்கு நினைவில் இருக்கின்றன. அந்த சந்தர்ப்பத்தில் எந்தவொரு ஜனாதிபதிக்கும் 5 ஆண்டு கால வரையறைக்கு அப்பால் ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் உரிமை கிடையாது எனக் குறிப்பிட்டிருந்தனர்.

அவ்வாறெனில் இந்தியப் பிரதமர் நாட்டுக்கு வருகை தந்து கையெழுத்திடவுள்ள ஒப்பந்தங்கள் என்ன? அவை தொடர்பில் மறைப்பதை விட பகிரங்கமாகக் குறிப்பிடுவதே உசிதமானதாகும். சம்பூர் மின்னுற்பத்தி நிலையம் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவுள்ளதாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

மேலும் அதானி நிறுவனம் இரத்துச் செய்துள்ள வேலைத்திட்டத்தை மீண்டும் அவர்களுக்கே வழங்குவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

எனவே இவற்றின் உண்மைத் தன்மையை உடனடியாக நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம். இந்தியாவுடனான நட்புறவைப் பேணுவது தொடர்பிலோ, பிரதமர் மோடி இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பிலோ எமக்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லை.

ஆனால் நாடு என்ற ரீதியில் பிறிதொரு நாட்டுடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்படுகின்றது எனில், அது தொடர்பில் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டியது அத்தியாவசியமானதாகும் என்றார். (ந-4,7)

# சர்வதேச விசாரணையை காலம் தாழ்த்தக்கூடாது

## முன்னணியின் பேச்சாளர் சுகாஷ்

ஈழத்தில் அரங்கேறிய இனப்படுகொலைக்கு உடனடியாக சர்வதேச விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனியும் காலத்தைக் கடத்துவதால் கண்கண்ட சாட்சிகள் இல்லாமல் போகின்ற அபாயம் ஏற்படுவதுடன் ஆதாரங்கள் சிதைவடையக்கூடிய சூழ்நிலையும் உள்ளது.

தமிழினத்துக்கு எதிராக வடக்கு, கிழக்கில் பல வதை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. பல இராணுவ முகாம்களில் உத்தியோகப்பற்றற்ற முறையில் சித்திரவதைக்கூடங்கள் இயங்கியுள்ளன.

இரகசியமாகக் கடத்தப்பட்ட பலரைத் திருகோணமலைக் கடற்படை முகாமில் வைத்திருந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆகவே சகல வதை முகாம்கள் தொடர்பாகவும் விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றார்.

(ந-4,7)

# கஜமுத்துக்களுடன் ஒருவர் கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள தியாவட்டுவான் பகுதியில் 4 கஜமுத்துக்களுடன் ஒருவரை வாழைச்சேனைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வாழைச்சேனை விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி பொ. ரத்நாயக்கா தலைமையிலான குழுவினர் குறித்த பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அங்கு கஜமுத்துக்களை விற்பனை செய்யமுற்பட்ட மூதூர் ஆலிம் நகரைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரை சுற்றிவளைத்துக் கைது செய்ததுடன் அவரிடமிருந்து 4 கஜமுத்துக்களை மீட்டுள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரையும் மீட்கப்பட்ட சான்றுப் பொருட்களையும் விசேட அதிரடிப்படையினர் பொலிஸாரிடம் ஒப்படைத்ததையடுத்து அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ந-4,7)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

*(சம்மாந்துறை)*

அனுமதிப்பத்திரம் இல்லாத துப்பாக்கி மற்றும் T56 வகையைச் சேர்ந்த துப்பாக்கியின் 10 ரவைகளுடன் ஒருவர் சம்மாந்துறைப் பொலிஸாரால் நேற்றுத் திங்கட்கிழமை (31) கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் மலையடிக்கிராமம் 04 பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய ஓய்வுபெற்ற சிவில் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சான்றுப்பொருட்கள் என்பன சட்டநடவடிக்கைக்காக சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ந-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் மூல வாக்குச்சீட்டுகள் ஏப்ரல் 5 இல் ஒப்படைக்க திட்டம்

## அரச அச்சகமா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்குச் சீட்டுகளை எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க திட்டமிட்டுள்ளதாக அரச அச்சகமா அதிபர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்குப்பதிவு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் நடைபெற உள்ளது.

குறித்த நாட்களில் வாக்களிக்க முடியாத அரச பணியாளர்களுக்காக ஏப்ரல் 28 மற்றும் 29 ஆகிய திகதி மேலதிக நாட்களாக ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அஞ்சல் மூல வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தேர்தல்கள் தொடர்பான அச்சிடல் பணிகள் நிறைவடையும் வரையில் அரசாங்க அச்சக திணைக்கள பணியாளர்களின் விடுமுறைகளை இரத்து செய்வதற்கான உள்ளக சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளதாகவும் அரச அச்சகமா அதிபர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித்துள்ளார். (நி)

# பெற்றோல் குண்டுத் தாக்குதல் 6 வயது சிறுவன் உயிரிழப்பு

(களுத்துறை)

களுத்துறை தெற்கில் ஒரு வீட்டை குறிவைத்து நடத்தப்பட்ட பெற்றோல் குண்டுத் தாக்குதலில் 6 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

கடந்த சனிக்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் வீட்டின் மீது பெற்றோல் குண்டை வீசியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலில் வீட்டினுள் இருந்த 28 வயதுடைய ஒரு பெண்ணும் 6 வயதுடைய ஒரு சிறுவனும் காயமடைந்தனர்.

சிறுவன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளான்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# பாதாள உலகக் கும்பலை சேர்ந்த "ரொட்டும்ப அமில" ரஷ்யாவில் கைது

(கொழும்பு)



பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "ரொட்டும்ப அமில" என்று அழைக்கப்படும் அமில சம்பத் என்பவர் ரஷ்யாவில் வைத்து அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

"ரொட்டும்ப அமில" கைது செய்யப்பட்டதை ரஷ்ய பொலிஸார் உறுதி செய்துள்ளதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# தென்னிலங்கையில் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

வீடொன்றில் இருந்த நபர் ஒருவர் மீது மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நேற்று அதிகாலை அம்பலாந்தோட்டை பொலிஸ் பிரிவின் கொக்கல்ல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர் அம்பலாந்தோட்டை, கொக்கல பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

காயமடைந்த நபருக்கும், மற்றொரு தரப்பினருக்கும் நீண்ட காலமாக இருந்து வந்த தனிப்பட்ட தகராறு காரணமாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களை கைது செய்வதற்காக அம்பலாந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3320


### கலா




### மாலன்




### சாம்சன்




### கலையரசன்




### அஞ்சலா




### றோகன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாளுக்கு நாள்...

மத்திய, சப்ரகமுவ, தென், வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளிலும் வெப்ப நிலையானது எச்சரிக்கை மட்டத்தில் நிலவக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த பகுதிகளில் 39 பாகை செல்சியஸ் முதல் 45 பாகை செல்சியஸ் வரை வெப்ப நிலை பதிவாகக்கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் வெளிப்புறங்களில் வேலை செய்பவர்கள் லேசான ஆடைகளை அணியுமாறும் நிழலான பகுதிகளில் ஓய்வெடுத்தல் மற்றும் போதியளவு நீரை அருந்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ந-7)

## பெற்றோலின்...

குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 299 ரூபாயாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 361 ரூபாயாகும்.

இதேவேளை ஓட்டோ டீசல், சுப்பர் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளை மாற்றமின்றித் தொடர இலங்கைக் கனிய வளக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது. ந-7)

## இந்திய -...

எதிர்வரும் 4ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரும் பிரதமர் மோடி இங்கு கைச்சாத்திடவுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சீனாவின் வளர்ந்து வரும் இராணுவ சக்திக்கு எதிரான அணியை உருவாக்கும் நோக்கத்துடன் இலங்கையுடன் இந்தியா இராணுவ ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதனூடாக சீனாவுக்கு எதிரான இந்தியாவின் யுத்தத்தில் இலங்கையர்களைப் பலிகொடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயாராகி வருகிறது.

எனவே, இந்தியாவுக்கும் - இலங்கைக்குமிடையில் எதிர்வரும் 5ஆம் திகதி கைச்சாத்தாகவுள்ள இந்த ஒப்பந்தத்தினூடாக 220 இலட்சம் இலங்கையர்கள் மாபெரும் உலகப் போரில் பலியாகக்கூடிய சாத்தியம் உள்ளதாக புபுது ஜயகொட மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

## அரச சேவையில்...

தேர்தலை இலக்காகக் கொண்டு புத்தளம் நகரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துரைத்த அவர்,

நாங்கள் 30,000 புதிய, திறமையான இளைஞர்களை வேலைக்கு அமர்த்துகிறோம். அதற்கான நிதி இப்போது ஒதுக்கப்பட்டுள்ளது.

செய்தித்தாள்களில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பியுங்கள், நாங்கள் உங்களுக்கு வேலை வாங்கித் தருகிறோம்.

அதேபோல அரச சேவையில் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு உயர்த்தப்பட்டுள்ளது. அஸ்வெசும கொடுப்பனவுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. இவை எதுவுமே கிடைக்காமல் 8 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்காக 5000 ரூபாய் பெறுமதியான உணவுப் பொதியை சதொச ஊடாக 2500 ரூபாயுக்கு வழங்குகிறோம் என்றார். (ந-7)

## பாரதப் பிரதமர்...

ரையாடல் நிகழ்ச்சி நிரலில் தமிழர்களின் அபிலாசைகளான மாகாண சபை முறைமை மற்றும் 13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பிலான விடயங்கள் உள்ளடக்கப்படமாட்டாது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாரம் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதுடன் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினருடன் கலந்துரையாடல்களிலும் ஈடுபடவுள்ளார்.

இக்கலந்துரையாடல்களின்போது ஈழத் தமிழர்களின் விவகாரம் பேசுபொருளாக இருக்கும் என தமிழ்த் தரப்புகளால் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே பாரதப் பிரதமரது இலங்கை விஜயத்தில் மாகாண சபை முறைமை உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்படுமா? என யாழில் வைத்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

மாகாண சபை முறைமை என்பது உள்நாட்டுப் பிரச்சினையாகும். அதனை இந்தியா எமக்குக்கூற வேண்டிய அவசியம் கிடையாது. மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்துவோம் என நாம் எமது கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்தவுடன் பெரும்பாலும் இந்த வருடத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்த எதிர்பார்க்கிறோம். நாம் ஏற்கெனவே மக்களுக்கு உறுதியளித்துள்ளோம்.

ஆகையால் அதனை இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டிய தேவை கிடையாது. நான் அறிந்தவரையில் 13ஆவது திருத்தம் தொடர்பில் எமது ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமருக்கும் இடையே நடைபெறும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை என்றார்.

உள்நாட்டில் போர் நடந்த போது, படைத் தரப்பாலும் விடுதலைப் புலிகளாலும் புலிகளுக்கு எதிராக வடக்கை மையப்படுத்தி செயற்பட்ட அமைப்புகளாலும் பல்வேறு முரணான செயற்பாடுகள் இடம்பெற்றன. இவை பொய்யல்ல. போர் ஒன்றின் போது அவ்வாறு (மனித உரிமைகள், விதிகள் மீறல்) இடம் பெறும் [illegible]த்து உள்நாட்டில் உள்நாட்டு மக்களின் பங்களிப்புடன் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறியுள்ளார். (ந-7)

## லாஃப்...

இதன்படி 12.5 கிலோ எரிவாயுவின் விலை 420 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி அதன் புதிய விலை 4,100 ரூபாயாகும்.

அத்தோடு 5 கிலோ எரிவாயுவின் விலை 168 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி அதன் புதிய விலை 1,645 ரூபாயாகும். (ந-4,7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.03.31
சீட்டிழுப்பு இலக்கம் 5792
Y 2 7 9 6 1 4
அத சம்பத Y 9 6 1 4
சீட்டிழுப்பு இலக்கம் 0367
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.03.31
சீட்டிழுப்பு இலக்கம் - 1822
Q 11 21 22 35 Q
Double Chance 64397

மெகா பவர்
திகதி 31/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2140
C 23 22 38 45 59

ஜய
திகதி 2025.03.31
சீட்டிழுப்பு இலக்கம் 060
J 2 2 8 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4034
சீட்டிழுப்பு திகதி | 31.03.2025
B 35 66 78 79
B
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.31
சீட்டிழுப்பு இலக்கம் 1101
துலாம் 31 35 41 42 துலாம்
52395 38

உத்தியோகபூர்வ முடிவுகள்
31.03.2025 வெற்றி வாரம் 500
K 4 5 6 7 2 8
66318
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.34,668,326.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2766
சீட்டிழுப்பு திகதி 2025.03.31 தினம் திங்கட்கிழமை
35 36 37 60 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,677,749.60
DLB

சனிதா
திகதி 31.03.2025 வெற்றி வாரம் 4927
03 46 59 79 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,981,060.00
62541
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.03.31 வெற்றி வாரம் 2116
15 22 37 51 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,678,901.20
DLB

சீட்டிழுப்பு வாரம் 4478
சீட்டிழுப்பு திகதி 31.03.2025 தினம் திங்கட்கிழமை
09 23 36 54 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,833,762.00
229916
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 32 06 09 13 15
1942
31.03.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.570,389,340.60
DLB

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2592
சீட்டிழுப்பு திகதி : 2025.03.31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,555,695.20
32 44 51 76 E
302707
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DMI - ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம்) யாழ்ப்பாணம்

## A/L 2027 பௌதிகவியல்

## N.BABU

- சனி, ஞாயிறு : 9 am - 10 am
- ஆரம்பம் : 05.04.2025 (சனி - 9 am)

⇨ பௌதிகவியலை 27 வருடமாகக் கற்பிக்கும் அனுபவமும், தேர்ச்சியும் கொண்ட ஆசிரியர்.
⇨ விடுமுறை நாட்களில் அதிக மணித்தியாலங்கள் Extra class எடுக்கும் ஆசிரியர்.
⇨ அலகு ரீதியிலான பரீட்சைகள், மாதிரிப் பரீட்சைகள் நடைபெறுவதுடன் Exam paper திருத்திக் கொடுக்கப்படும்.
⇨ பாடசாலையில் பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்.
⇨ Paper class க்கு என தனியான மணித்தியாலங்கள்.
⇨ Batch முடியும் போது பாடத்திட்டம் முழுமையாக முடிக்கப்படும்.
⇨ தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.

(3805)

077 936 5087

# PERSONAL / GROUP / ZOOM CLASSES

## A/L 2027 ADVANCED LEVEL - TAMIL / ENGLISH MEDIUM

INFORMATION & COMMUNICATION TECHNOLOGY (ICT)

COMMENCING ON 5TH OF APRIL 2025

| | |
|---|---|
| Tuesday, Thursday | 5 Pm - 7 Pm |
| Wednesday, Friday | 6 Pm - 8 Pm |
| Saturday, Sunday | 5 Pm - 7 Pm |

(3807)

AT IPS to your future

Thirunelvely, Jaffna.
T.P : 077 570 4893/ 074 234 9120

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

# ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2587)

076 825 7716 (ஆகாஸ்)

# வேலையாட்கள் தேவை

வவுனியா, கிளிநொச்சி, கொழும்பு மற்றும் யாழ். நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- காசாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- சாரதி (கொழும்பில் தங்கி நின்று வேலை செய்பவர் விரும்பத்தக்கது.)

(3806)

தொடர்புகளுக்கு : 076 440 8953

# KBK கொழும்புத்துறை

புதிய பிரிவு

## A/L 2027 கணக்கீடு



MR.BALAKAJEN SLTS
B.com(Jaf), H.N.Dip.in.Acc(ATI), Dip.in.Edu(OUSL), M.com(Hons) Acc.spl

ஆரம்பம்
02.04.2025 புதன்கிழமை
மாலை 5.00 மணி

ADMISSION OPEN NOW

A/L 2025/ DAY /2026
பிரிவுகளுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

A+ சித்தி உறுதி

உங்கள் அனுமதிகளுக்கு

(964)

077 452 0043

# ICT Group Class

A/L 2027

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
02.04.2025 (புதன்) பி.ப 4.00 மணி

தரம் 10, 11 ற்கான வகுப்புக்களும் நடைபெறுகின்றன. (3799)

K.Manimaran (B.Sc in IT)
K.K.S Road, Uppumadam Junction, Kondavil. 077 801 0219

| Gr 10 | Gr 11 | A/L 2027 |
|---|---|---|
| 5.30 - 6.30 (am) Mon & Wed | 5.30 - 6.30 (am) Tue & Thu | 4.00 - 5.30 (pm) Mon & wed |

# கடை ஒன்று வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை அண்மித்த பகுதிகளில் கடை ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு
077 919 1529

(987)

# உடனடி வேலை வாய்ப்பு

## நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு


வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2588)

# மரண அறிவித்தல்

பிறப்பு 11 - 01 - 1937

இறப்பு 31 - 03 - 2025



## திரு.தில்லையம்பலம் பத்மநாதன்

(ஓய்வுபெற்ற கணக்காளர், இலங்கை துறைமுக அதிகார சபை)

சரவணையைப் பிறப்பிடமாகவும் வாசல வீதி, கொழும்பு-13, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தில்லையம்பலம் பத்மநாதன் அவர்கள் நேற்று 31.03.2025 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணநாதன்(தபாலதிபர்), ஸ்ரீதேவி, யோகநாதன் மற்றும் நகுலாம்பிகை(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2025) செவ்வாய்க் கிழமை காலை 11.00 மணியளவில் 23,பிரம்படி 1ம் ஒழுங்கை, கொக்குவில் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

23, பிரம்படி 1ம் ஒழுங்கை,
கொக்குவில்.

தகவல்: Dr.S. [illegible]
077 315 5100

(3804)

# பகிரங்க ஏல விற்பனை

புங்குடுதீவு - மடத்துவெளி ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான உழவு இயந்திரத் தொகுதி (உழவு இயந்திரம், பெட்டி, நீர்த்தாங்கி, கலப்பை, றொட்டர் உட்பட) பகிரங்க ஏலத்தில் 06.04.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

உழவு இயந்திரத் தொகுதியை ஆலயத்தில் மு.ப 9.00 - பி.ப 4.00 மணிவரை பார்வையிடலாம்.

(3797)

தொடர்புகளுக்கு
074 328 3356

ஆலய பரிபாலன சபை,
மடத்துவெளி, புங்குடுதீவு.

# காணி விற்பனைக்கு உண்டு

## உரும்பிராய் வடக்கில் 13½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் ஒரு பரப்பின் விலை 1,200,000 (பன்னிரண்டு இலட்சம் ரூபாய்)
- சரஸ்வதி சனசமூக நிலையம் அருகாமை குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- செம்மண், நன்னீர் ஊற்று நிலப்பரப்பு 20 அடிப் பாதை.
- உரும்பிராய் இந்துக் கல்லூரி 1 Km தூரம்.
- உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோயில் 1 ½ Km தூரம்.
- தரகர் தேவையில்லை.

(3803)

தொடர்புகளுக்கு
076 990 3039 / 077 468 3354

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.